DOI: 10.54392/ijot2445

Asian Research Association

INDIAN JOURNAL OF TAMIL

# Human Values in Vairamuthu's Poems

T. Margret Malathi [a,*]

[a] Department of Tamil, Kongunadu Arts And Science College, Coimbatore-29, India
*Corresponding author Email: mmt@kongunaducollege.ac.in

DOI: https://doi.org/10.54392/ijot2445
Received: 03-08-2024; Revised: 07-11-2024; Accepted: 13-11-2024; Published: 28-11-2024

**Abstract:** The history of the saints to whom man spoke is not merely the history of the individual. It is the humanitarian history of humanity as a whole. Poets are the images of those great men who did not live for themselves but for others. They took up pens in the hope that someday they would be able to turn a man who was only covered in bone skin into a man. Whether they succeeded in their endeavor should be noted that their journey towards the goal has not yet slackened. It should be noted that their journey towards the goal of humanistic value sown in the poems of the new poet Vairamuthu has not slackened even today. In this regard, this article is aimed at searching and compiling the human values/seeds sown in the poems of Vairamuthu, a new poet.

**Keywords:** Vairamuthu, Tamil Poet, Human Values, Humanity

# வைரமுத்துவின் கவிதைகளில் மானுட மதிப்பீடுகள்

மார்க்கரேட் மாலதி [அ, *]

[அ] தமிழ்த்துறை, கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோயமுத்தூர்-29, இந்தியா

## முன்னுரை

மனித வாழ்வு பிறரைச் சார்ந்து வாழும் ஒரு வாழ்வாகக் காலங்காலமாக நகர்ந்து கொண்டுள்ளது. கூடி வாழவேண்டும் என்ற முழக்கத்துடன் மனித சமுதாயம் ஒருவரை ஒருவர் சார்ந்து வாழத் தலைப்பட்டது. அன்பைக் கொடுத்து வாழ வேண்டும் என்று பேசிக் கொண்டே பண்பைக் கெடுத்து வாழும் இயல்பு என்னும் நிலையும் மெல்ல மெல்லத் தோன்றியது. உலகில் வாழும் ஒவ்வோர் உயிரும் தன் நிலைபேற்றிற்கு ஓயாது போரிடுதலும் அப்போரில் வலிமை மிகுந்தவை எஞ்சுதலும் இயற்கை" என்னும் டார்வின் கோட்பாட்டின்படி வலிமையுள்ளவை வாழ்வு பெறுகின்றன. இயந்திரமாகிவிட்ட மனித வாழ்வில் வேகம் என்னும் கருவி வேகமாகவே இயங்கிக் கொண்டிருக்கின்றது. அவனுடைய வாழ்வு ஏதோ ஒருவகையில் யுத்தமாகவே தொடர்கின்றது.

மனிதன் பேசிய மகான்களின் வரலாறு வெறும் தனிமனித வரலாறு அன்று. ஒட்டுமொத்த மானுடத்தின் மனித நேய வரலாறு ஆகும். தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்ந்த அப்பெரியோர்களின் பிம்பங்கள்தான் கவிஞர்கள். என்றாவது ஒருநாள் என்புதோல் போர்த்த உருவில் மட்டுமே உள்ளவனை, மனிதனாக்கிவிடலாம் என்கிற நம்பிக்கையில் எழுதுகோல் எடுத்தவர்கள் அவர்கள். தங்கள் முயற்சியில் அவர்கள் வெற்றியடைந்தார்களா என்பதைவிட்ட இலக்கை நோக்கிய அவர்களின் பயணத்தில் இன்றளவும் தொய்வில்லை என்பதைக் கவனித்தாக வேண்டும் என்பர். அவ்வகையில் புதுக்கவிதைப் படைப்பாளியாகிய வைரமுத்துவின் கவிதைகளில் விதைக்கப்பட்டுள்ள மனிதநேய விழும இலக்கை நோக்கிய அவர்களின் பயணத்தில் இன்றளவும் தொய்வில்லை என்பதைக் கவனித்தாக வேண்டும் என்பர். அவ்வகையில் புதுக்கவிதைப் படைப்பாளியாகிய வைரமுத்துவின் கவிதைகளில் விதைக்கப்பட்டுள்ள மனிதநேய விழுமியங்களை/வித்துக்களைத் தேடித் தொகுத்தளிக்கும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.

10.54392/ijot2445

## தாய்மையும் மனிதநேயமும்

உயிர்கள் அனைத்திற்கும் பிறப்பிடம் தாயின் கருவறை. தாயன்பினை "அழைப்பு" என்னும் கவிதையில் வைரமுத்து காட்டுகையில், தாயன்பிற்காக ஏங்கித்தவிக்கும் பிஞ்சு உள்ளங்களைன் நாட்டில் ஏராளம். ஆனால் இக்கவிதையில் பிஞ்சுக் குழந்தைகளின் குறும்புச் செயல்களுக்காக ஏங்கும் தாயின் உள்ளம் தென்படுகின்றது. கழுத்தை மெல்லக்கடித்து, கூந்தலைக் கலைத்துப் பூக்களை உதிர்த்துவிட்டு, குளித்துவரும்போது மீண்டும் அழுக்காக்கி, உதட்டு எச்சிலால் உடல்பூசி, மார்பகப் பள்ளத்தில் முகம் வைத்து மூச்சுவிட்டு, மூச்சுநிற்கும் அளவிற்குத் தனக்கு முத்தம் தருமாறு பிள்ளையிடம் அன்னை விண்ணப்பிக்கின்றாள்.

"மேகங்களுக்கிடையில்/ நட்சத்திரம் தூங்கினாலும்

இலைகளுக்கிடையில் காற்று தூங்கினாலும்

என் கண்கள் உனக்காக இரவெல்லாம் விழித்திருக்கும்"

என்ற வரிகளில் தன்னை அழித்துத் தன்பிள்ளையை வளர்க்கும் தாய்மை உள்ளம் தென்படுகின்றது (Vairamuthu, 2008). பெண்மையின் பரிபூரணமாக, வெற்றிடத்தின் நிறைவாக, ஆகாய கங்கையாக அன்னையை மகிழ்விப்பது குழந்தையே. அத்தாய் தன்பிள்ளையிடம் கண்ட சுகங்களை எண்ணியெண்ணி உள்ளம் விம்முகின்றாள்.

"நெற்றியில் தீயெரியும் தியானத்தில் வந்ததில்லை

வில்லாய் விறைக்கும் கலவியில் கண்டதில்லை

பிரசவம் முடிந்த பெருமூச்சில் கொண்டதில்லை

எங்கே மீண்டுமொரு முறை முந்தானைக்குள் புகுந்து

முயல்குட்டியாகு - தட்டாத தாய் சொல்லைக் கேள்

பத்துமாதம் என் வயிறுசுமந்த பிஞ்சுப் பிரபஞ்சமே"

என்ற வரிகளில் தன்பிள்ளையை அணைக்கும்போது தனக்குக் கிடைக்கும் சுகத்திற்கு இணையாக இவ்வுலகில் வேறு எதுவும் இல்லை என்றுரைக்கின்றாள் (Vairamuthu, 2008). தாய் பேசுவதாக கவிஞர் வைரமுத்து, இக்கவிதையில் தான்பேசி தாய்-பிள்ளைப் பாசத்தை, நேசத்தை, இரத்த உறவின் வலிமையை உணரவைக்கின்றார். கவிஞர் பொன்மணி வைரமுத்து 'தாய்ப் பல்லாண்டு' என்னும் கவிதையில் தாய்மைக்குப் பல்லாண்டு பாடுகின்றார்.

இல்லாண்ட பெண்ணாள் மணித்தாயே உன்

தாய்மை மண்ணிற்குத் தனிக்காப்பு

எந்திர யுகத்தில் எத்தனையோ பணிநடுவில்

இதயம் தொலைக்காத தாய்மைக்குப் பல்லாண்டு

என்ற வரிகளில் தாய்மையின் குணங்களைப் பட்டியலிட்டு, அத்தகைய பாசத்திற்காக, பரிவிற்காக, நேசத்திற்காக பல்லாண்டு வாழ்க என்று பாடுவதன் மூலமாக தாய்மைக்குக் கவிஞர் கொடுக்கும் ஏற்றமும் மனித நேயத்தின் வடிவாகத் தாய்மை திகழ்வதை உணர வைக்கும் நோக்கமும் தெளிவாகின்றது (Vairamuthu, 2008). மனிதநேயத்தின் ஊற்றுக்கண்ணாகத் திகழ்வது தாய்மை மனிதநேயப் பண்புகள் அனைத்தின் தோற்றத்திற்கும் காரணமாக விளங்குவது தாய்மையே என்பதை உணரவைக்கின்றார் கவிஞர், குழந்தையாய்த் தாயின் மடியில் தவழ்ந்த வயதில் தாய்தான் எல்லாம் என்ற நிலை. எனவே அப்போதைய மனநிலையில் உணர்வில் தாய் மட்டுமே பெரிதாய் அனைத்துமாய் தோன்றுவது ஒன்றும் வியப்பில்லை. கவிஞன் வளருகிறான், தன் தாய்நாட்டை முழுமையாகச் சுற்றி வருகிறான், மனிதர்களைப் படிக்கிறான், சமுதாயம் அறிகிறான், நதிகளை வாசிக்கிறான், இப்போது அவன் பல்லாற்றானும் பட்டறிவு பட்டவன், எதையும் சீர்தூக்கிப் பார்த்து முடிவெடுக்கும் அனுபவ முதிர்ச்சி பெற்றவன். இவ்வளவு

அனுபவத்திற்குப் பிறகும் தாய்மை பற்றி மழலையின் நிலையில் அவன் கொண்டிருந்த உணர்வுக் கருத்தில் மாற்றம் இல்லை என்கிறார் முருகேசன் (Murugesan, 1999).

"பேதம் இல்லை என்பார் வேதாந்தம் பேசிடுவார்

பெற்றவனைப் பேயென்பார் மற்றவளைத் தாயென்பார்

சரித்திரத்துச் சான்று சொல்வார் தாயன்புப் பெட்டகத்தைச் சந்தியிலே எறிந்துவிட்டுத் தன்மான வீரரென்பார்"

காதல் அறம் என்பார் கற்பின் விலை என்னவென்பார்

தர்மமென்பார் நீதியென்பார் தரமென்பார். (Balakrishnan, 2009)

என்ற கவிதை வரிகள் மனிதநேயத்தை மறந்தவர்களுக்குச் சரியான சாட்டையடி எனலாம். போலி வேடமும் நீலிக்கண்ணீரும் மனிதநேயத்தை மறைக்கும் திரைகளாகத் திகழ்வதை புதுக்கவிஞர்கள் சாடுகின்றனர். புதுக்கவிஞர் ரிஷிவந்தியா மனிதநேயத்தை மறந்தவர்களிடம் ஒரு வேண்டுகோள் வைக்கின்றார்.

"மானிடா நவக்கிரகங்களை (வலம் வந்தது போதும். உன் கர்ப்பக் கிரகம்/கவனிப்பா ரற்றுக் கிடக்கிறது பார்.

என்கின்றார். கர்ப்பகிரகமாகிய தாய் கவனிக்கப்படாவிடினும் பெற்றவள் என்னும் பேருக்காகவாவது கண்டு கொள்ளப்படுமா? என்ற வினாவையும் எழுப்புகின்றார். கலீல் ஜிப்ரானின் கவிதையை வைரமுத்து மொழிபெயர்த்துத் தருகின்றார். அக்கவிதை மனிதநேயத்தை பற்றிக் கூறும்போது,

"நீ பூமியில் பிறக்காமல் இருந்திருந்தால் ஒரு

தேவதையாய் இருந்திருப்பாய் என்றாள் என் அம்மா

இப்போதும் நான் தேவைதான் என்

தேவதையானால் சிறகுகள் எங்கே அம்மாவின் கைகளை என்

தோள்களில் தூக்கிப் போட்டுக் கொண்டு சொன்னேன்

இவைதான் என் சிறகுகள்"

என்று காட்டுகின்றார் (Vairamuthu, 2008). தன் பிள்ளையைப் பற்றிய உள்ளார்ந்த உயர்ந்த அன்பின் வெளிப்பாடு, இக்கவிதையின் கருப்பொருள். தாயின் கைகளையே தனக்குச் சிறகுகளாகக் கொண்டு உயரப் பறக்கத் துடிக்கும் மகனின் செயல் மண்ணுலகில் வாழும் மனிதருக்கெல்லாம் தாய் தரும் அரவணைப்பு விண்ணிலும் பறக்க வைக்கும் என்ற மனிதநேயத்தை உணர்த்தி நிற்கின்றது.

தாய் உலக உறவுகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட புனிதமான பந்தத்தை உருவாக்கி மனிதத்தைத் தழைக்கச் செய்கிறாள். கடுகளவும் இரக்கமில்லாத அரக்கன்கூட அவளை அம்மா என அழைக்கும்போது உருவாகும் உயிரின் ஓசைதான் பூமி இன்றளவும் நிலைபெறுவதற்குக் காரணம். பெண்சக்தி எனும் தாய்முன் மற்ற அறிவியல் கண்டுபிடிப்புச் சக்திகளாகிய புவியீர்ப்பு, அணுசக்தி, மின்சக்தி ஆகியவை செயலற்றுப் போகும். சிந்தை அணு ஒவ்வொன்றையும் சிலிர்க்க வைக்கிற உயிர்ஈர்ப்புச் சக்தியான அன்னையைப் பற்றிய மதிப்பீடுகள் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவை. அன்னையெனும் ஆலயத்தின் வலிமையைப் பாடும் கவிஞர் வாலி,"பசுந்தங்கம் புதுவெள்ளி மாணிக்க மணிவைரம் அவையாவும் ஒரு தாய்க்கு ஈடாகுமா? என்று புகழாரம் சூட்டுகின்றார்.

மாக்களிலிருந்து வேறுபட்ட ஆறறிவு படைத்த மனித மனம் விந்தையானது. அன்பினைக் கண்ணீர் வழிக்காட்டக்கூடிய விழுமிய நிலை மற்ற உயிர்களிடத்தில் இல்லாத மனிதருக்கு மட்டுமே உரிய தனிச்சிறப்பாகும். ஆனந்தத்தைப் புன்னகை வழிக்காட்டக்கூடிய உயரிய நிலை மற்றுமொரு சிறப்பு எனலாம். இத்தகைய மாண்புகள் இருந்தாலும் மனித மனம் அங்காடி

நாய்போல் தடுமாறவும், தடம் மாறவும் செய்வதன் காரணங்கள் புரியாத புதராகவே உள்ளன. குரங்கிலிருந்து தோன்றிய மனிதன் திரும்பவும் குரங்கின் நிலைக்குச் சென்றுவிட்ட மனித மந்தைகளிடம் மனித நேயத்தை எப்படி எதிர்பார்க்க முடியும் என்பது இன்றைய கேள்வியாக உள்ளது. ஆதலால் கவிஞர் வைரமுத்து "ஆதலால் மனிதா" என்னும் கவிதையில், மனிதக் கணக்கில் வாழ்வு பெரிதென்றும் காலக் கணக்கில் வாழ்வு சிறிதென்றும் எடுத்துக்காட்டி, அச்சிறிய வாழ்வில் சிறந்தனவற்றை செய்து இம்மண்ணில் நீடுபுகழ் பெற்றிடத் தூண்டுகின்றார். அன்னை தந்தை உறவில், முன்னோரின் அறிவுரைகளில், கல்வியின் கட்டற்ற போக்கில், காதலின் மயக்கத்தில், பதவி ஆசையில், நோயின் பிடியில், குறைந்து போன உடல் வலிமையில், தனிமைத்துன்பத்தில் என்ற வாழ்வுக்கும் சாவுக்குமான இடைவெளிக்கு இடையில் மனித உள்ளம் ஊசலாடிக் கொண்டிருக்கும் தன்மையை எடுத்துக்காட்டி,

இருக்கும் நாட்களை இரட்டிப்பாக்கு சூரியன் நிலவு இரண்டிலும் விழித்திரு படுக்கை போட்டுத் துயில் கொள்ளாதே துயில்வரும் போது படுக்கை போடு காலையில் பூமியில் உட்துளையிட்டு மாலையில் பூமியின் மறுபுறம் வெளிப்படு மனித உள்ளம் காலிக் கிண்ணம் இலட்சியங்களை ஊற்றி நிரப்பு விண்ணும் மண்ணும் வெற்றியின் இயக்கு செவ்வாய் கிரகம் சீக்கிரம் உனக்கு என்ற வரிகளில் முயற்சி என்பது ஒன்றிருந்திருந்தால் வாழ்வில் முடியாது என்பதே கிடையாது என்பதை வலியுறுத்துகின்றார் (Vairamuthu, 2008). நல்ல வழிகாட்டுதலும், அறிவுறுத்துதலும் ஒவ்வொரு மனிதனுக்கும் தேவை. நல்லவற்றைக் கைக்கொண்டு அல்லனவற்றை விலக்குவதற்கு கவிஞரின் வழிகாட்டுதல்கள் வழிவகுக்கும் எனலாம். அதுவும் இளைய சமுதாயம் பல்வேறு சிற்றின்பச் செயல்களுக்கு ஆட்பட்டு, இளமையையும் இனிய வாழ்வையும் தொலைத்துவிட்டு நிற்கின்ற அவலத்தைப் போக்குவதற்காக அவர்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையில் இக்கவிதை அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. நாளை உலகம் உன் கையில் என்பதை இளைய சமுதாயத்திற்கு உணர்த்துவது படைப்பாளியாகிய கவிஞனின் கடமை என்பதை உணர்ந்தவர் வைரமுத்து.

## முதிர்கன்னியரும் மனிதநேயமும்

இவ்வுலகில் உள்ள உயிரினங்களுக்குப் பிற உயிரும் தன்னைப் போல இருக்கும் ஓர் உயிர் என்ற எண்ணம் தோன்றும்போது அவ்வுயிர் என்ற எண்ணம் தோன்றும்போது அவ்வுயிர் மீது ஒருவகையான பற்று உண்டாகின்றது. இதனை விலங்குகள் குட்டி ஈனும்போது அதனை அன்புடன் பார்த்தும், சுவைத்தும் இன்புறுவதன் மூலம் அறியலாம். அன்பினை இன்பத்திலும் துன்பத்திலும் உணரலாம். குறிப்பிட்ட வயதை அடைந்துவிட்ட பெண்ணிற்குத் திருமணம் என்பது சமுதாயத்தில் கட்டாயமாக்கப்பட்ட காரியம் எனலாம். விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் திருமணம் எனும் பந்தத்தில் இணைய வேண்டிய காலகட்டம் ஒவ்வொருவரின் வாழ்விலும் வந்துவிடுகின்றது. இதற்கு விதிவிலக்காக இருப்பவர்கள் ஏழை வீட்டுப் பெண்கள். முதிர்கன்னியர்களாகத் திருமண வாழ்வை எதிர்நோக்கி ஏமாந்து போய் சஞ்சலப்பட்டுக் கருகிய மொட்டாகவே மாறிப்போய் விடுகிறார்கள்.

"இருக்கட்டும் இருக்கட்டும்

எனக்கும் ஒரு நாளிருக்கு எதுவும்

நடக்கலேன்னா

எருக்கிலையில் பாலிருக்கு"

என்ற அளவுக்கு அந்த இதயம் விரக்தியின் இறுதிக்கே சென்றுவிடுகின்றது (Vairamuthu, 2008). மற்றவர்கள் மகிழ்வாக இருப்பதைக் காண்கின்ற போது முதிர்கன்னியரின் மனநிலை மேலும் மேலும் சிதைவுறுகின்றது.

"உறக்கமில்லை என்றாலும் ஒருகோடிக் கனவிருக்கு

இறக்கவில்லை என்றாலும் எனக்கெங்கே உயிரிருக்கு?"

என்று இயல்பாக ஒவ்வொரு உள்ளத்திலும் தோன்றும் கனவுகள் அப்பெண்ணின் மனதிலும் தோன்றியபோதும் அவையெல்லாம் அவையெல்லாம் வெறும் கனவாக நின்றுவிட்ட அவலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. (Vairamuthu, 2008) இந்த அவலங்கள் மறைய வேண்டுமெனில் வரதட்சவை கேட்காமல் திருமணம் செய்து கொள்ளத் தயாராக இருக்கின்ற மனிதநேயம் மிக்க ஆண்மக்கள் முன்வரவேண்டும் என்பது கவிஞரின் விருப்பமாகத் தோன்றுகின்றது. சமுதாயமென்னும் தேர் உருண்டோடுவதற்கு ஆண்-பெண் என்னும் இருசக்கரங்கள் இணைந்து ஒரே நோக்கில் ஒரே திசையில் நகர்ந்தால்தான் இயலும்.

"எங்கள் வீட்டுத் தேநீர்க் கோப்பையில் /எத்தனை உதடுகள்

எங்கள் வீட்டுச்சிற்றுண்டித் தட்டில்

எத்தனை சுவடுகள்/ நான் அலங்காரத்தில் ஆண்டாளாய்

ஆனால்/ஆடை கொண்டும் ஏவாளாய்..."

என்று வருத்தமடையும் முதிர்கன்னியர்கள் முதலில் நிற்கப்போவது என் மூச்சுக்காற்றா? இல்லை மாதவிலக்கா? என்று நினைப்பதாகக் கவிஞர் காட்டுகின்றார் (Vairamuthu, 2008).

"என் இளமையின் வேர்களைக் கனவு தின்றது

இளமையின் கிளைகளை ஜாதகம் தின்றது

இளமையின் தளிர்களை செவ்வாய்தோஷம் தின்று முடித்தது

இளமையின் மலர்களைக் குழப்பம் அச்சம் கொய்து கொண்டன

இப்போது கொடி வாடி நிற்கிறது இதழ்கள் இழந்த காம்போடு

என் சூரியனை மறைக்கும் கிகரம்தான் யாது ?

கிளர்ந்து வெளியேறுங்கள் கிளிகளே - இதுவரை

பாத்திரத்தைத்தானே துலக்கி வைத்தோம் சாத்திரத்தை ?"

என்ற வரிகளில் புதிய சரித்திரம் படைக்க வருமாறு அதாவது சாத்திரத்தையே புதிதாகத் துலக்கி வைக்க முயலுமாறு அழைக்கும் கவிஞர் வைரமுத்து புதிய சமுதாயத்தை அமைப்பதில் விருப்பம் கொண்டுள்ளார் எனலாம். இச்சமூகத்தில் முதிர்கன்னியர்கள் அடையும் வேதனையை/ விகம்பல்களைத் தீர்க்க வழிதேடும் கவிஞரின் மனிதநேய உள்ளம் வெளிப்படுகின்றது (Vairamuthu, 2008).

## புகழுடம்பு பெறுதலும் மனிதநேயமும்

புகழுடம்பு பெறுதல் சிறப்பாகக் கருதப்படும்நிலையில் புகழ் என்பது நீ தேடிச் செல்லக்கூடியதாக அல்ல உன்னைத் தேடி வருவதாக இருக்க வேண்டும் புகழின் பின்னால் நீ போனால் அது பொய்மான். புகழ் உன்பின்னால் வந்தால் அது நிஜமான். அப்போதுதான் அதற்கு நீ எஜமான் என்கிறார் கவிஞர். புகழை ஓர் எல்லையில் நிறுத்துகின்ற மனோபாவம் வாய்க்கப்பெற்றால் மனிதநேயம் சிறப்படைய அதுவே போதுமானது.

"சிறுதாளை எல்லாம் ஒன்றாய் உருவாக்கும்

உன்னைத் தூய ஒற்றுமைச் சின்னம் என்பேன்" (Vairamuthu, 2007)

என்ற வரிகளில் குண்டூசியை ஒற்றுமையின் சின்னமாகக் காண்கின்றார். உயிருடன் உலாவரும் மனிதர்களிடையே ஒற்றுமைப் பண்பு இல்லாமல் போன இழிநிலையைத் தெளிவாக்குகின்றார். மனித உறவுகள் கூட ஒருகாலத்தில் வெறுத்து ஒதுக்கப்பட்டு பின்னர் தேடி வந்து சேர்கின்ற நேரம் வாய்க்கும்

"வெறுப்பினால் உன்னைத் தூர வீசுவார்

ஆமாம், அந்தத் கிறுக்கர்க்குத் தேடும் போது கிடைக்காமல்

ஆட வைப்பாய் உறுதியாய் உரைப்பேன்

இங்கே உனக்குள் குள தன்மானத்தில்

அறுபதில் ஒரு பங்கேனும்

அமிந்த மனிதர்க் கில்லை"

என்ற கவிதையில் தன்மான உணர்வு கொண்ட ஒருவன் ஒற்றுமையைக் குலைக்க மாட்டான் (Vairamuthu, 2007). அவன் மேலும் மேலும் உறவுகளை உறுதியாகத் தன்னோடு இணைத்துக் கொள்ளவே முயல்வான் என்கின்றார்.

மனித நேயம் பெருமையையும், உரிமையையும் மதிக்கும் வகையில் அமைந்ததொரு கொள்கையாகும். மனிதனின் ஆளுமைப்பண்புகளை மதிக்கவும், அவனது நலன்களைப் பேணிவரவும், சமூகவாழ்வின் அனைத்துத் துறைகளிலும் மனிதன் முழுமையான வளர்ச்சியைப் பெறவும் துணைபுரிவது மனிதநேயமாகும். சமயம் மற்றும் இனவெறிக் கொடுமை, சமயக்காழ்ப்பு, அரசியல் அதிகாரத்தன்மை ஆகிய அனைத்து இயல்புகளையும் அகற்றுவதே மனிதநேயத்தின் நோக்கமாகும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்தம்முயில்போல் எண்ணி என்று இராமலிங்க சுவாமிகள் எல்லா உயிர்களையும் தம்உயிராகக் கருதுகின்ற மனிதநேயத்தை விதைத்து, அனைத்துயிர்களின் துன்பம் களைதலையே குறிக்கோளாகக் கொண்ட வாழ்வுதான் வாழ்வு என்பதை உணர்த்துகின்றார்."

"காதுபிளக்கும் /தனிமையின் இரைச்சலில்

கண்மூடிச் சிந்திக்கிறேன்

என்னை நேசிக்க ஊருக்கு உத்தரவிட்டேன்

நான் யாரை நேசித்தேன்?

சுற்றிச் சுவரெழுப்பிச் சுற்றிச் சுவரெழுப்பி நானும்

சுவரானேன்/முடிவுக்கு வந்துவிட்டேன்

எதிர்காலத்திட்டம் இன்னொரு முறை

மந்திரியாவதல்ல/ மனிதனாவது (Vairamuthu, 2008)

என்ற கவிதை வரிகளில் வைரமுத்து மனம் திருந்திய அரசியல்வாதியைக் காட்டுகின்றார். அரசியல் என்னும் நாடக மேடையில் வேடம் புனையும் அரசியல்வாதிகளின் வாழ்க்கை போலி என்னும் போர்வை போர்த்தப்பட்டதாகும். பதவியில் இருக்கும்போது மக்களுக்குப் பாடுபட வேண்டிய அவர்கள் அதைச் செய்யாமல் போய், பதவி பறிபோன பின்பு சமுதாயத்தை எண்ணிச் சிந்திப்பதாகக் கவிஞர் காட்டியிருப்பது நோக்கத்தக்கது. பிறருக்கு உதவுகின்ற நல்ல எண்ணம் என்று தோன்றுகின்றதோ அன்றே மனிதன் மனிதனாகின்றான். அவனுக்குள் மனிதநேயம்என்னும் பயிர் துளிர்விடுகின்றது. அந்த வாழ்வில் அன்றுமுதல் சேவையும் மனநிம்மதியும் வந்து நிறைவெய்துகின்றன.

அஃறிணை உயிர்கள் கூட தங்களுக்குள் சுமூகமான உறவினைப் பரிமாறிக் கொள்கின்ற இன்றைய காலகட்டத்தில் மனிதர்களுக்குள்தான் வேறுபாடுகள் அதிகம் விலங்கினைவிடத் தாழ்ந்து மனிதன் வாழத் தலைப்பட்டு விட்டான். மனிதநேய உயர்பண்புகள் அருகிப் போய்க் கொண்டிருக்கின்றன. "பசி வந்தபிறகு மிருகங்கள் சாப்பிடுகின்றன. பசியில்லாத போது அவை சாப்பிடுவது இல்லை. பசி வந்தபிறகு சாப்பிடுவது மிருகங்களுக்கு இயற்கை. ஆனால் மனிதனோ அப்படியில்லை. பசி தீர்ந்தபிறகு கூட அருந்துகின்றான். பசியை இழந்தபோதுகூடக் கற்பனை செய்து கொண்டே ஏங்குகிறான்" என்ற கூற்று முழுவதும் இன்றைய சமுதாயத்திற்குப் பொருந்தும் என்கிறார் ஜெயகாந்தன்.

"எந்தப் பறவையும் கூடுகட்டி வாடகைக்கு விடுவதில்லை எந்த விலங்கும் தேவையற்ற நிலம்/ திருடுவதில்லை" (Vairamuthu, 2021)

என்ற கவிதை வரிகளின் வாயிலாகத் தனது அடிப்படைப் பண்பான மனிதநேயப் பண்பிலிருந்து மனிதன் பிறழ்ந்து சுயநலத்தையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் தன்மையைப் புலப்படுத்துகின்றார். மேலும் தூய்மையான மானுடம் என்பது தோலின் நிறம் பார்ப்பதாக இருக்கக்கூடாது. அந்தத் தோலுக்குள் துடித்துக்கொண்டிருக்கின்ற இதயத்தைப் பார்ப்பதாக இருக்க வேண்டும் என்பதே கவிஞரின் ஆசையாக இருக்கின்றது.

"போட்டி பொறாமைகளைப் புறந்தள்ளிச் சிரித்துவிட்டு

நீட்டிப் படித்து மனம் நிறைவு பெறக் கூடாதா

வட்டங்கள் போடும்/விருட்சமாகி வரும்வரைக்கும்

அதனுள்ளே நானிருந்தே/அறிவுபெறக் கூடாதா" (Vairamuthu, 2008).

தவம் என்னும் கவிதையில் இடம்பெற்றுள்ள இவ்வரிகள் மனித மனத்தின் ஆழத்தினைத் தேடுகின்றது. ஆசையற்ற மனம், அழிவுற்ற உடல், ஓசையற்ற உலகு, சாவில் வரும் ஞானம் ஆகியவை வாழ்வுக்கு வாய்க்க வேண்டும் என்பதே கவிஞரின் எதிர்பார்ப்பு வட்டம் போடும் வாழ்க்கைக்குள் சிக்காமல் வெட்டவெளி போல விரிந்து சென்றும் மனமும் விதையொன்று விருட்சமாக வளரும் தன்மையும் தனக்கு வாய்க்க வேண்டும் என்றும் இதன் மூலம் இம்மண்ணில் உயிர்களிடம் அன்பு பூண்டொழுக வேண்டும் என்றும் விரும்புகின்றார் கவிஞர்.

## தானமும் மனிதநேயமும்

தனக்கு மிஞ்சியதுதான் தானம் என்றபோதும் தானத்தில் சிறந்தது கண்தானம் என்ற கூற்று வலியுறுத்தப்படுகின்றது. ஒருவர் இறந்தபிறகும் இம்மண்ணில் வாழ்வதற்கு ஒரு நல்வழி கண்தானமாகும். போற்றிப் பாதுகாக்கப்பட்ட இவ்வுடம்பு இறுதியில் நெருப்பிற்கோ அல்லது மண்ணிற்கோ இரையாவதைவிட ஓர் உயிருக்குப் பயன்படுமானால் அதைவிட மேலான தர்மம் என்பது கிடையாது. மனிதநேயத்தின் வடிவாகத் திகழும் மக்கள் தாங்கள் இறந்தபிறகு தங்கள் உடலையே தானம் செய்கின்றார். மருத்துவக் கல்லூரி மாணவர்களின் ஆய்வக பயிற்சிக்காகத் தன்னுடம்பு பயன்பட வேண்டும் என்று நினைக்கின்றனர். கண்தானம் செய்யும் செயல் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்க வேண்டும் என்பது கவிஞர் வைரமுத்துவின் எதிர்பார்ப்பு தன்னுடைய கண் வேறு ஒருவருக்குக் பொருத்தப்பட்ட பின்பு அவர் மூலமாக வாழ்ந்து, பின்பு அவர் இறந்த பிறகு வேறொருவருக்கும் எனது கண்கள் பொருத்தப்பட வேண்டும் என்று விரும்புகின்றார்.

"நான் இப்படித்தான் உயில் எழுத விரும்புகின்றேன்

நான் இறந்தவுடன் என் கண்கள்/

பார்வையற்ற ஒருவன் கண்களில் பதிக்கப்பட வேண்டும்

இந்தத் தங்க உலகத்தை அவன் தரிசிக்க வேண்டும்

அவன் மரணமடைந்தால் அதே கண்கள்

பார்வையற்ற இன்னொருவனுக்குப் பதிக்க வேண்டும்

இப்படியாக என் கண்கள் ஊழியின் எல்லைவரை

யுகங்கடந்து வாழ வேண்டும் என்கண்கள்

என் மரணத்தை வெல்ல வேண்டும்" (Vairamuthu, 2021)

என்று பாடுகின்றார். ஊழிக்காலத்து இறுதி நிமிடம் வரை கண்கள் உயிர்ப்புடன் விளங்க கண்தானம்தான் சிறந்தது என்பதை உணர்த்துகின்றார். விழியிழந்து தவிக்கும் மனிதர்களிடம் கவிஞருக்கு இருக்கும் நேயம் இவ்வரிகளில் புலப்படுகின்றது.

## முடிவுரை

ஒவ்வொரு தனிமனிதனும் இச்சமுதாயத்தின் ஒரு அங்கம் என்பதால் அவனுடைய உணர்வுகளும் எண்ணங்களும் மதிக்கப்படவேண்டியது அவசியமாகின்றது. மனிதநேயம் என்னும் உணர்வு உயிர்களாகப் பிறந்த அனைத்திற்கும் உரிய ஒன்றாகத் திகழ்கின்றது. பெண்மையைப் போற்றிப் பாராட்டாத மண்ணில் மனிதநேயம் மலராது போய்விடும் என்பதை வைரமுத்துவின் புதுக்கவிதைகள் பறைசாற்றுகின்றன. மக்களுக்கும் வேறுபாடு எண்ணாத மனமும், பிறர்துன்பம் கண்டு இரங்கும் உள்ளமும் அனைவருக்கும் வாய்க்கப்பெறவேண்டும் என்பது வைரமுத்துவின் ஆசையாகவும் எதிர்பார்ப்பாகவும் இருக்கின்றது. தாய்மை எனும் அன்புக்கடலில் எழுந்து வரும் எல்லாத் துளிகளிலும் அன்பு எனும் சுவை அகலாமல் இருப்பதால், அன்பிற்கும் மனிதநேயத்திற்கும் ஊற்றாகத் திகழ்வது தாய்மைப் பண்பே ஆகும். தன்னைத்தேடி வருகின்ற புகழையும், பழியையும் ஒன்றாகவே ஏற்றுக்கொள்ளும் மனோபாவம் வாய்க்கப்பெற வேண்டும். அந்நிலையில் மனிதன் துன்பங்களால் துவண்டுபோய்விடமாட்டான் என்னும் எண்ணத்தை வைரமுத்து எடுத்துரைக்கின்றார். எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர்போல் வாழும் வாழ்க்கைதான் சிறந்த வாழ்க்கை என்பதை வைரமுத்துவின் கவிதைகள் புலப்படுத்துகின்றன. பிறருக்கு வாரிக்கொடுக்கும் வள்ளல்கள் காலங்காலமாக வாழ்ந்து காண்டிருப்பதால்தான் இவ்வுலகம் இயல்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. தானம் தவம் இரண்டும் ஒவ்வொருவருடைய வாழ்விலும் இன்றியமையாதவை என்பதையும், உடல் உறுப்புக்களை தானம் செய்வதாலும், நாம் இறந்துபோன பிறகும் இம்மண்ணில் வாழ்கின்ற பெரும் வாய்ப்பினைப் பெறுவதோடு, மற்றொருவரின் வாழ்வுக்கும் காரணமாகின்றோம் என்பதையும் தன் படைப்புக்களில் பதிவு செய்துள்ளார் வைரமுத்து, ஆகவே மனிதநேயம் எனும் காலச்சக்கரத்தின் சுழற்சியினால்தான் இவ்வுலகம் என்னும் தேர் நகர்ந்துகொண்டுள்ளது எனில் மிகையன்று.

## References


Balakrishnan, P.E (2009) Pattukottai Kalyanasundaram Padalkal, New Century Book House, Chennai, India

Murugesan, K. (1999) Valkai Nathiyodu Vairamuthu, Kaviya Pathipagam, Chennai, India

Vairamuthu (2007) Vaigarai Megangal, Visa Publications, Chennai, India

Vairamuthu (2008) Vairamuthu Kavithaikal, Surya Literature Pvt. Ltd., Chennai, India

Vairamuthu (2021) Ellaa Nathiyil Oodam, Surya Literature Pvt. Ltd., Chennai, India



### Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



### About the License

© The Author 2024. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License



### Cite this Article

T. Margret Malathi, Human Values in Vairamuthu's Poems, Indian Journal of Tamil, 5(4), (2024) 24-31. https://doi.org/10.54392/ijot2445